Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 06 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஹூ புரட்டாதி மீ 28 வ. ஞாயிற்றுக்கிழமை (14-10-1990) ஹிஜ்ரி 1411 ரபி. அப். 24 ஓசை 239

## ஆசிரியர், அரச ஊழியருக்கு பயண ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகியமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கும் ஏனைய அரச ஊழியர்களுக்கும் பயணஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மேற்படி ஊழியர்களுக்கு நாளை திங்கட்கிழமை பயணம் செய்வதற்கான ஒழுங்குகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் செய்துவருகிறது. விரும்பும்ஊழியர்கள்நாளை (6ஆம் பக்கம் பார்க்க)

# பாவற்குளத்தில் 'பவல்' புலிகளால் அழிப்பு

## பல இராணுவத்தினர் பலி

(வவுனியா)

வவுனியா மாவட்டம் பாவற்குளம் இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் ஒரு பவல் வாகனம் சேதமடைந்ததுடன் அவ்வாகனத்தில் வந்த அனைத்து இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் 'பவல்' கவச வாகனங்கள சகிதம் முகாமில் இநந்து வெளியேற முயன்ற இராணுவ அணிமீது விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகளின் ஆர், பி. ஜி. தாக்குதலுக்கு உள்ளான 'பவல்' வாகனம் ஒன்று முற்றாகச் சேதமடைந்தது. அதில் வந்த இராணுவத்தினர் அனைவரும் கொல்லப்பட்டனர்.

சில மணிநேரம் தொடர்ந்து நடந்த தாக்குதலில் படையினருக்கு இழப்புக்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து படையினர் முன்னேற முடியாது பின்வாங்கிச் சென்றனர். (க)

## பாடசாலைகள் இயங்குகின்றன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பாடசாலைகள் ஆரம்பித்துள்ளன. அதே வேளை மாணவர் வரவும் (6ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா கடற்படை சுட்டு இந்திய மீனவர் ஒருவர் பலி

(சென்னை)

சிறிலங்காவின் கடற்படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் இந்திய மீனவர் ஒருவர் கொல்லப்பட்டார் மேலும் மூவர் படுகாயமடைந்தனர்.

கச்சதீவுக்குச் சமீபமாக மீன் பிடித்துக்கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீதே இத் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றது.

## வைத்தியசாலை இயங்குகிறது; ஆனால் உபகரணங்கள் இல்லை

(வவுனியா)

வவுனியா அரசாங்க வைத்தியசாலைப் பிரசவ விடுதியும், அதற்கான சிகிச்சை நிலையமும் இயங்க வைக்கப்பட்டபோதிலும், அவற்றிற்கான மருத்துவ உபகரணங்கள் எதுவுமே வைத்தியசாலையில் இல்லை என்று வவுனியா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவ நடவடிக்கையின்போது மேற்படி வைத்தியசாலையில் இருந்த பெறுமதி வாய்ந்த பொருட்கள் காணா (6ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு ஊறணியில் இரண்டு இராணுவத்தினர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஊறணிப் பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஊறணி இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் ஊறணிப் பிள்ளையார் கோயிலடியில் தேடுதல் மேற்கொண்டிருந்த சமயம் விடுதலைப்புலிகள் இவர்கள்மீது கடும் தாக்குதலைத் தொடுத்தனர். இத்தாக்குதலில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் பலர் காயமடைந்தனர். (க)

## அரச திணைக்கள ஊழியருக்கு ஆறு மாத இலவச நிவாரணம்

(கொழும்புத்துறை)

யாழ். அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபன உள்ளூராட்சிச் சபைகள், ஆகியனவற்றைச் சார்ந்த சகல ஊழியர்களுக்கும் ஆறு மாதங்களுக்கான இலவச நிவாரணப் பங்கீட்டுப் பொருள்கள் வழங்கப்பட உள்ளன.

யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் எடுத்த துரித முயற்சியின் பயனாக மேற்படி நிவாரணத்தை வழங்குமாறு ஸ்ரீலங்கா அரசாங்கம் சுற்று நிருபம் ஒன்றினை யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இச்சுற்று நிருபத்தின் பிரகாரம் ஒரு குடும்பத்தில் உள்ள (6 ஆம் பக்கம் பார்க்க)

## பலாலியில் இருந்து பரவலான ஷெல் தாக்குதல் பலர் காயம்

(குரும்பசிட்டி)

குரும்பசிட்டி, ஏழாலை, குப்பிளான், ஊரங்குளை போன்ற பகுதிகளை நோக்கி பலாலி இராணுவ முகாமில் இருந்து பலத்த ஷெல் தாக்குதல்கள்மேற்கொள்ளப்பட்டதில் பலர் காயமடைந்துள்ளனர். சில கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன.

நேற்றுக் காலையில் இருந்து நண்பகல் வரை தொடர்ச்சியாக நடைபெற்ற இத்தாக்குதலின்போது குப்பிளான் மேற்கு விக்கினேஸ்வரா சன சமூக நிலையத்திற்கு அண்மையில் ஒரு ஷெல் வீழ்ந்து வெடித்ததில் ப. பரமேஸ்வரி (வயது 38), உதயகுமார் (6ஆம் பக்கம் பார்க்க)

## குச்சவெளி முகாம் மீது புலிகள் ஷெல்தாக்குதல்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்ட குச்சவெளி சிறிலங்கா கடற்படை முகாம்மீது விடுதலைப் புலிகள் பலத்த ஷெல் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

கடந்த வியாழன் இரவு தொடர்ச்சியாக இம் முகாம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இத் தாக்குதலில் கடற்படையினர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டதாகவும் தெரிகிறது. படையினரின் உயிரிழப்புக்கள் பற்றிய சரியான எண்ணிக்கை இதுவரை தெரியவரவில்லை. (க)

## நாளை 15ஆம் திகதி முதல் தேசிய சேமிப்பு வங்கி இயங்கும்

(கொழும்புத்துறை)

தேசிய சேமிப்பு வங்கியின் யாழ். கிளை கடந்த மூன்றரை மாத காலமாக வான்தாக்குதல்களால் செயல்படாதிருந்தது.

இவ் வங்கி நாளை 15ஆம் திகதி திங்கட்கிழமை முதல் வண்ணார்பண்ணையில் உள்ள பிரப்பங்குளம் ஒழுங்கையில் செயல்படவுள்ளது.

15ஆம் திகதிமுதல் வாடிக்கையாளர்களுடன் பணக் கொடுக்கல் வாங்கல் வேலைகள் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## அக்கரைப்பற்றில் அதிரடிப்படையால் முப்பது தமிழர் சுட்டுக் கொலை!

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்றில் முப்பது தமிழர்கள் சிறிலங்கா விசேட அதிரடிப் பொலிஸாரினால் சுட்டுக் கொல்லப்பட்டதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்கொலைகள் பழிவாங்கும் நோக்கில் செய்யப்பட்டதாகவும், முகாமில் இருந்து வாகனத்தில் ஏற்றிவந்த தமிழர்களே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டார்கள் எனவும் அச்செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

## ஒரு பொலிஸ்பலி; ஒருவர் படுகாயம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வந்தாறுமூலைப் பகுதியில் ரோந்துசெல்ல முயன்ற விஷேட அதிரடிப் படையினரை விடுதலைப்புலிகள் வழிமறித்துத் தாக்கியதில் அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதாகவும், ஒருவர் படுகாயமுற்றதாகவும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## பாலஸ்தீனியர் படுகொலையை விசாரிக்க ஐ. நா. குழு

கடந்த வாரத்தில் ஜெருசலேமில் 22 பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலியர்களினால் படுகொலை செய்யப்பட்டது பற்றி சுதந்திரமான விசாரணை மேற்கொள்ளவும், அப்பிரதேசத்தில் பாலஸ்தீனியர்களின் பாதுகாப்புக்குரிய வழிமுறைகளைக் கண்டறியவும், ஐ. நா. பொதுச் செயலரின் நேரடி உதவியாளர் மூவர் (6ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் கலைஞர் வி. எம். குகராஜா

## தமிழீழப் போராட்டத்திற்கு கலைவடிவம் தந்தவர்

(அலுவலக நிருபர்)

\- ஆஞ்சநேயர்

தமிழீழப் போராட்டத்தை கலை வடிவமாகத் தந்து, சமுதாய சீர்கேடுகளை தமது கலைப் படைப்புகள் மூலம் வெளியுலகிற்குக் காட்டிய மக்கள் கலைஞர் வி. எம். குகராஜா தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் முக்கிய இடத்தை வகிக்கின்றார். இவர் விட்டுச் சென்றபணிகளைத் தொடர்வதும் அவரது இலட்சியங்களை நிறைவேற்றுவதுமே அவருக்கு நாம் செய்யும் நினைவஞ்சலியாகும்.

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### நியூ வீனஸ்
### NEW VENUS

எமது அன்பான வாடிக்கையாளருக்கு ஒரு வேண்டுகோள் எமது ஸ்தாபனம் 153 A பலாலி வீதியில் (விவசாய பாடசாலை அருகில்)(NEAR FARM SCHOOL) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு. (B/1470)

### டில்கா வாச் வேக்ஸ்
### (Dilka Watch Works)

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையில் (கிராம சபைக்கருகில்) நடைபெறுகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகல எலெக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்குண்டு. (B-1444)

### போட்ஃபோஸ்ரட்

தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகளையும், அடையாள அட்டைகளையும் கவர் இட்டு உடனடியாகப் பெற்றுக் கொள்ள கிளின்கட், 37, சிவகுருநாதன் வீதி, பிறவுண் றோட் யாழ்ப்பாணம். (நீராவியடிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில்) வேலை நேரம் தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை (R/705)

### சித்ராலயா ஸ்ருடியோ

சித்ராலயா நிறுவனத்தில் தரமான போட்டோஸ்ரட் பிரதிகளை 351, கோவில் வீதி நல்லூர் (கம்பன் கோட்டம் முன்பாக) என்ற முகவரியில் காலை 9 மணி முதல் 12 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும் மாலை 2 மணி முதல் 5 மணி வரை புகைப் படம் பிடிக்கப்படும்.
(B/ 1496)

### இடமாற்றம்
### பரீஸ் ரெக்ஸ்

105, அரசடிறோட், தட்டாதெரு பிறவுண் வீதி சந்திக்கு அருகாமையில் எமது ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளருக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம். (R-728)

### ரதி வோச் வேக்ஸ்

ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 14 கஸ்தூரியார் வீதியில் இருந்து இல. 12 பொன்னையா லேன் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் (பிடாரி கோயில் உபதபால் அலுவலகத்திற்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். திருத்துதல் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (B-1495)


## 31 ஆம் நாள் வீர அஞ்சலி



வீர ஜனனம்
14 | 06 | 1973

வீர மரணம்
14 | 09 | 1990

### வீரவேங்கை ஶ்ரீராம்

(சபாரத்தினதேசிகர் நந்தகுமார்
சாம்பல்தீவு திருக்கோணமலை)

கோட்டையிலே எம் கொடிதனை ஏற்றிடும்
கொள்கையுடன் நின்று போரிட்ட வேங்கையே
சாட்டைகொடுத்து எதிரிபடைதனை விரட்டிட
சபதம் கொண்ட வேங்கைகள் வீரனே
நாட்டைக் காக்கும் உயரிய பணிதனிலே
நாளும் உழைத்த உத்தம புதல்வனே
வேட்டுக்கிரையாகி வீரமரணமடைந்ததால்
வெம்புகிறோம் உன்பணி தொடர்ந்திட-
விரைகிறோம்.

B/1499

நண்பர்கள்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### குழந்தைவேலு பிரமானந்தம்

(மாமணி)

ஆண்டவன் படைப்பு
01-08-1946

அரக்கன் அழிப்பு
14-10-1988

வேங்கைகள் குழுவிற்கு
தோள் கொடுத்த வீரத்தமிழனே
வேலையற்ற வீணர்களின்
வேட்டுக்கள் மார்பைத் துளைத்தபோதும்
வேங்கைகள் என்றுமே தூங்குவதில்லை என்று
வீர முழக்க மிட்ட வீர மறவனே
உன் காயாத கல்லறைக்கு
உளம் நிறைந்த கண்ணீர்ப் பூக்கள் அர்ப்பணங்கள்.

கந்தசாமி கோயிலடி
இணுவில் மேற்கு.

தம்பிமார்.

(B-1489)


உங்கள் தற்போதைய உடனடித் தேவைகளுக்கு

- வீட்டு மின்னிணைப்புகள்
- பிளம்பிங் வேலைகள்
- வெல்டிங்
- மோட்டர் றிவைன்டிங்

மற்றும் சகல மின்சார வேலைகளும் சலுகை அடிப்படையில் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

### ஜெகஜோதி என்ஜினியறிங் வேக்ஸ்

41, பஜார் லேன், யாழ்ப்பாணம்.

(B/1481) பதிவு இல. 4376.


விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் நடாத்தும்

# மாவீரர் தின
# கலை கலாசாரப் போட்டிகள்

தமிழீழ மக்களே!

★ இவ்வாண்டு மாவீரர் தினத்தையொட்டி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் எழுத்தாளர், கலைஞர்கள் மற்றும் இத்துறையில் ஆர்வமிக்கோர், மாணவர்கள் அனைவரையும் ஊக்குவிப்பதற்காகவும், அவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்காகவும் கலை கலாசாரப் போட்டிகளை நடாத்தவுள்ளனர். இப்போட்டிகள் கீழ்க்காணும் விடயங்களில் நடைபெறவுள்ளன.

- நாவல்
- சிறுகதை
- கவிதை
- கட்டுரை
- சுவரொட்டி

★ போட்டிகள் அனைத்தும் மாணவர்களுக்கு வேறாகவும் மற்றையோருக்கு வேறாகவும் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளன.

★ தமிழீழத்தில் அதியுயர் கௌரவமிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ள இப்போட்டிகளில் ஆர்வமும் ஆற்றலுமிக்க அனைவரும் கலந்துகொள்ளலாம்.

## போட்டிகளுக்கானவிதிமுறைகள்

★ தமிழீழ மக்கள் எவரும் கலந்துகொள்ளலாம்.

★ படைப்புக்கள் யாவும் தமிழீழ விடுதலைப் போரை அடிப்படையாகக்கொண்டு அதனை முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் செறிந்ததாகவும், சமகால எமது மண்ணினதும் மக்களதும் பிரச்சினைகளை அடிநாதமாகக் கொண்ட யதார்த்தத் தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம். மண்மீட்புப் போரில் இன்னுயிர் ஈந்த வீரவேங்கைகளினதும், வீராங்கனைகளினதும் உணர்வுகளையும், இதயதாகத்தையும் பிரதிபலித்தல் வேண்டும்.

★ சுவரொட்டிக்கான கருப்பொருட்களும் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல்வேண்டும்.

★ இலக்கியப் படைப்புக்கள் யாவும் தாளின் ஒருபக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டதாக அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

★ ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்புதல் வேண்டும்.

★ சிறுகதைகள் 10 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்கு குறையாததாகவும் இருத்தல் வேண்டும்.

★ கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

★ சுவரொட்டிகள் யாவும், 'ஆட்போட்'டில் 60cm x 40cm அளவுகொண்டதாக வண்ணப்படங்களாகவோ (எந்த வண்ணமும் உபயோகப்படுத்தலாம்) கறுப்பு வெள்ளைப் படங்களாகவோ வரைந்து அனுப்பலாம்.

★ போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களது படைப்புக்கள் அவர்களது பாடசாலை அதிபர் அல்லது வகுப்பாசிரியர் ஆகியோர் மூலம் அவர்களது சொந்தப் படைப்புத்தான் என்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

★ போட்டிக்கான கட்டுரைகள் 3000 – 5000 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் நல்லது.

★ போட்டிகளுக்கான படைப்புக்கள் அனுப்பப்படவேண்டிய இறுதித் திகதி 25 - 10 - 1990.

★ அனைத்து ஆக்கங்களும் ''ஈழநாதம்'' அலுவலகத்திற்கு குறிப்பிட்ட திகதிக்கு முன் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். அல்லது படைப்பாளிகளின் சொந்த ஊரின் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி பிரதேசப் பொறுப்பாளரிடம் நேரில் கையளிக்க வேண்டும்.

★ தகுதி வாய்ந்த நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியாகும்.

## மாணவர்க்கான போட்டிகள்
## பற்றிய சிறப்பு விதிகள்

★ மாணவர்க்கான போட்டிகள் பின்வரும் விடயங்களில் நடைபெறும்.
1) சிறுகதை 2) கவிதை 3) கட்டுரை 4) ஓவியம்

★ சிறுகதை, கவிதை, ஓவியம் ஆகியன முன்னர் மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

★ ஓவியங்கள் 18''x12'' அளவு கொண்டதாக இருத்தல் வேண்டும்.

★ கட்டுரைகள் கீழ்வரும் அம்சங்களைக் கொண்டதாகவும் 2500 சொற்களுக்கு மேற்படாததாகவும் அமைதல் வேண்டும்.
1) விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும்.
2) தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி.
3) தமிழீழ மாணவர்களது கல்வியின் எதிர்காலம்.
4) இன்றைய சூழ்நிலையில் மாணவர்களின் சமூகப்பணிகள்.
5) ''போராடுவதற்காகக் கற்போம்''

★ மாணவர்க்கான போட்டிகள் யாவும் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு, என மூன்று பகுதிகளாக நடாத்தப்படும்.
15 வயதிற்குட்பட்டோர் கீழ்ப்பிரிவு.
15—17 வயதிற்இடைப்பட்டோர் மத்தியபிரிவு.
17வயதிற்கு மேற்பட்டோர் மேற்பிரிவு.

★ ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியாக பரிசுகள் வழங்கப்படும்.

# நவம்பர் 5 இல் யாழ். பல்கலைக் கழக புதிய கல்வியாண்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக நிர்வாகம் நவம்பர் மாதம் 5 ஆம் திகதியில் இருந்து புதிய கல்வி ஆண்டை ஆரம்பிப்பதற்கான முன் ஒழுங்குகளைச் செய்து வருகின்றது.

இது தொடர்பாக நேற்று முன்தினம் 'செனற்' கூட்டப்பட்டு முடிவு எடுக்கப்பட்டதாக துணைவேந்தர் அ. துரைராசா கூறியிருந்தார்.

இதன்படி 5 ஆம் திகதி தொடக்கம் சகல பல்கலைக் கழக மாணவர்களுக்கும் புதிதாக 1989/90 ஆம் வருடத்திற்காக அனுமதிக்கப்பட்ட முதலாம் வருட மாணவர்களுக்கும் இத் திகதியிலேயே விரிவுரைகள் ஆரம்பமாகும் என்றும் துணைவேந்தர் தெரிவித்தார்.

மேலும் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள விவசாய பீடமும் கைதடி சித்த மருத்துவத் துறை விரிவுரைகளும், இராமநாதன் நுண்கலைப் பிரிவு வகுப்புக்களும் இத் திகதியில் இருந்து ஆரம்பமாகும். அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களையும் வருகை தருமாறு துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா கேட்டுக் கொள்கிறார். (மூ)

## கிளிநொச்சி பொதுச் சந்தை மர அரிவு காணியில் இயங்கும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொதுச்சந்தை அரச மர அரிவு ஆலைக்காணியிலும், கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயம் அதன் அண்மையிலுள்ள இரு வீடுகளிலும் நடாத்த விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர். இராணுவத்தினரால் கிளிநொச்சிப் பொதுச்சந்தை குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டும், தீ மூட்டி எரிக்கப்பட்டும், விமானக் குண்டு வீச்சினால் முற்றாகச் சேதமாக்கப்பட்டதாலும் மேற்படி சந்தை அவ்விடத்தில் இயங்க முடியாது போய்விட்டது.

அதேபோல கிளிநொச்சி நகரிலுள்ள கனிஷ்ட மகா வித்தியாலயக் காணிக்குள் சிறிலங்கா இராணுவத்தினரால் மிதிவெடிகள் புதைத்து வைக்கப்பட்டுள்ளதாலும், குண்டு வீச்சினால் மேற்படி பாடசாலைக் கட்டடம் சேதமடைந்துள்ளதாலும், அப்பாடசாலை அக்கட்டடத்தில் இயங்க முடியாதுள்ளது.

வர்த்தகர்களினதும், பொது மக்களினதும் நன்மை கருதி சந்தையை நகரிலுள்ள அரச மர அரிவு ஆலைக் காணியில் புதிதாக அமைக்க விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

அதேபோன்று மாணவர்களின் நன்மையைக் கருதி, கனிஷ்ட மகா வித்தியாலயத்தை மேற்படி பாடசாலைக்கு அண்மையிலுள்ள இரண்டு வீடுகளில் தற்காலிகமாக நடாத்த விடுதலைப் புலிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

மிதிவெடிகள் அகற்றப்பட்டபின் சந்தையும், பாடசாலையும் உரிய இடத்திற்கு மாற்றப்படும். (49)

## படகு மீது கடற்படை தாக்குதல்

(வடமராட்சி கிழக்கு)

இந்தியாவுக்குச் சென்ற படகினை சிறிலங்கா கடற்படை தாக்கியதில் படகில் சென்ற ஒருவர் மட்டும் நீந்தி வந்து மீன்பிடி கட்டுமரம் ஒன்றின் உதவியுடன் கரைவந்து சேர்ந்துள்ளார்.

படகில் சென்ற ஏனைய மூவருக்கு என்ன நடந்தது என்பது பற்றித் தெரியவில்லை.

கடந்த புதன்கிழமை (10-10 90) இரவு வடமராட்சி கிழக்கில் உள்ள உடுத்துறை என்னுமிடத்தில் இருந்து சென்ற படகே இந்நிலைக்கு உள்ளானது.

உடுத்துறையைச் சேர்ந்த இ. சந்திரலிங்கம் (வயது 24) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையும், சி. பாஸ்கரன் (வயது 23) என்ற ஒரு பிள்ளையின் தந்தையும், ச. ஜெயசோதி (வயது 24) என்ற ஒரு பிள்ளையின் தந்தையும், நா. லிங்கேஸ்வரன் (வயது 19) என்ற இளைஞருமே படகில் பிரயாணம் செய்தவர்களாவார்கள்.

படகில் பிரயாணம் செய்த ச. ஜெயசோதி என்பவர் மட்டும் கடலில் குதித்து நீந்தி, கட்டுமரத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர் ஒருவரின் உதவியுடன் கரை வந்து சேர்ந்தார்.

பின்னர், அவர் சிகிச்சைக்காக மருதங்கேணி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

படகில் பிரயாணம் செய்த ஏனைய மூவரின் நிலைபற்றி எதுவித தகவலுமில்லை. 36)

## வவுனியாவில் வங்கிகளை இயங்க வைக்க முயற்சி

(வவுனியா)

வவுனியா வங்கிக் கிளைகள் அனைத்தையும் மீண்டும் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த ஜூன் மாதம் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது மேற்படி வங்கிக் கிளைகள் அனைத்தும் சேதமடைந்தன. இவை தவிர இராணுவச் சிப்பாய்களினால் வவுனியா இலங்கை வங்கிக் கிளையினுள் இருந்த பொருள்களும், ஹற்றன் தேசிய வங்கிக் கிளையில் இருந்த பொருள்களும் சூறையாடப்பட்டன என்று ஈழநாதம் செய்தி வெளியிட்டிருந்தமை தெரிந்ததே.

சேதமடைந்தவை காணாமல் போன பொருள்களின் விபரங்களை பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் வந்து பார்வையிட்ட பின்னரே வங்கிக் கிளைகள் செயல்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## 26 உப மின்மாற்றிகளில் 12இல் ஒயில் திருடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையில் உள்ள இருபத்தியாறு உப மின்மாற்றிகளில் பன்னிரண்டு மின்மாற்றிகளில் இருந்து ஒயில் திருடப்பட்டுள்ளது என வட பகுதி மின்சார சபையினர் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த திருட்டு காரணமாக தேவையான ஒயில் விபரத்தையும் ஏனைய பதினான்கு மின்மாற்றிகளின் நிலைமை பற்றியும் மின்சாரசபையினர் அறிக்கை ஒன்று தயாரித்துள்ளனர்.

ஆகவே இந்த பன்னிரண்டு மின்மாற்றிகளுக்கும் ஒயில் இடப்படும் வரை யாழ்நகர சபைக்குள் மின் கிடைப்பதற்கான சாத்தியம் இல்லை எனவும் தெரியவருகிறது. (லோ)

## பிரதேசபை அலுவலகம் பஸ்கொம்பனிக்கு இடமாற்றம்

(வேலணை)

வேலணை பிரதேசசபையின் தலைமைக் காரியாலயம் அதன் உப அலுவலகம் என்பன தற்பொழுது வேலணையில் உள்ள பழைய பஸ் கொம்பனிக்கு அருகாமையில் உள்ள தனியாருக்குச் சொந்தமான கட்டடமொன்றில் இயங்கி வருகின்றது.

தீவுப்பகுதியில் சிறிலங்கா அரசினால் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளின்போது விமானக் குண்டுகளால் வேலணை பிரதேசசபையின் தலைமைக் காரியாலயம், உபகாரியாலயம், பொது நூல் நிலையம், ஆயுர்வேத வைத்தியசாலை என்பன முற்றாகச் சேதமாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புடைவைத்திருட்டு பிடிபட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். முத்திரைச்சந்தியில் உள்ள ஓர் புடைவை வியாபார நிலையத்தில் சில உடுபுடைவைகளைத் திருடிய ஒருவர் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டார்.

நேற்று மாலை இடம்பெற்ற இத் திருட்டுச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது: புடைவை கொள்வனவுக்கு வருவதுபோல் வந்தவர் சில புடைவைகளை எடுத்து மறைத்துக்கொண்டு வெளியேறியபோது பிடிபட்டார். (க)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் பாதுகாப்பு பற்றிய கலந்துரையாடல் நாளை திங்கட்கிழமை 15ஆம் திகதி காலை 9-00மணிக்கு மேற்படி கல்லூரியில் நடைபெறும்.

ஆசிரியர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் தவறாது சமுகம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

## விதைநெல்லுக்கு தட்டுப்பாடு

யாழ். மாவட்டத்தில் காலபோக வேளாண்மைக்கு விதை நெல்லுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக கமக்காரர்கள் கவலை தெரிவித்துள்ளனர். நெல்விதைப்பு ஆரம்பமாகும் இவ்வேளையில் குறுகிய காலத்தில் நல்ல விளைச்சலைத் தரக்கூடிய விதை நெல் இனங்களான பி ஜி 34 - 6, மற்றும் 500-1 ஆகியனவற்றைப் பெற முடியாது பெரும்பாலான விவசாயிகள் கஷ்ரப்படுகின்றார்கள்.

இந்த விதை நெல் ரகங்கள் கடந்த காலங்களில் கமநலச் சேவை நிலையங்கள் ஊடாக சகல விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டு வந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

## அரச அதிபர் முகாமையாளர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பெற்றோலிய கூட்டுத்தாபன முகாமையாளர் மின்சாரசபை பிரதான முகாமையாளர், இலங்கை வங்கி முகாமையாளர், மக்கள் வங்கி முகாமையாளர், கிராமிய சுகாதார அபிவிருத்தி அதிகாரி, மருத்துவக் கல்லூரி பணிப்பாளர், போக்குவரத்துச் சபை பொது முகாமையாளர், ஹற்றன் நசனல் வங்கி முகாமையாளர், வர்த்தக வங்கி பிரதம முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி வடபிராந்திய முகாமையாளர், தொலை தொடர்பு திணைக்கள பிரதம முகாமையாளர் ஆகியோரை அரசாங்க அதிபர் நாளை திங்கட்கிழமை 15ஆம் திகதி சந்தித்து உரையாட உள்ளார். இந்த உரையாடலைத் தொடர்ந்து சில முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் எனவும் தெரியவருகிறது. (லோ)

## கொடிகாமத்தில் மின் விநியோகம்

(கொடிகாமம்)

பல மாதங்களுக்குப் பின்னர் கொடிகாமத்திற்கும் அதன் சுற்றாடல் பகுதிகளுக்கும் வியாழக்கிழமை நண்பகல் 2 மணியில் இருந்து மாலை 6.00 மணிவரை மின்சாரம் கிடைத்தது. (86)

## படை வீரர் ஒருவர் காலை இழந்தார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் உள்ள சித்தாண்டி என்ற பகுதியில் விடுதலைப்புலிகள் வைத்த பொறி வெடியில் சிக்கிய ஒரு இராணுவ வீரர் கால்களை இழந்துள்ளார்.

## குருக்கள் குடும்பமும் அடங்கும்

(அனலைதீவு)

கடலில் மூழ்கி மரணமடைந்ததாகக் கூறப்படும் 67 பேர்களில் அனலைதீவு ஐயனார் கோவில் குருக்கள் குடும்பமும் ஒன்றாகும் எனக் கூறப்படுகின்றது.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இ. கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் (வயது 36), கி. சாவித்திரிஅம்மா (வயது 32), இ. அரிகரப்பிரியா (வயது 14), கி. சிவப்பிரியா (வயது 11), கி. ஜனனி (வயது 8) ஆகியோரே இந்த குடும்பத்தினர் ஆவர்.

## கலப்பட டீசல் பறிமுதல்

(கிளிநொச்சி)

கலப்படம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்ட 150 லீற்றர் டீசல்வியாபாரிகள் இருவரும் பொது மக்களால் பிடிக்கப்பட்டு விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் மீசாலை வடக்கில் இடம் பெற்றது.

மேற்படி டீசலைத் தாங்கள் தாளையடியில் வாங்கியதாக டீசல் வியாபாரிகள் இருவரும் தெரிவித்தனர்.

மேற்படி வியாபாரிகளின் 150 லீற்றர் டீசல் பறிமுதல் செய்யப்பட்டதுடன், அவர்கள் இருவரும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளனர்.

## தெல்லிப்பளை மருத்துவமனை குடிநீர்ப் பிரச்சினை தீர்ந்தது

தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனையில் நீண்டகாலமாக நிலவி வந்த குடிநீர்ப் பிரச்சினை இன்றுமுதல் தீர்க்கப்பட்டுள்ளது.

அம்மருத்துவ மனையின் உட்பகுதியில் பதினைந்து வருடங்களுக்கு மேலாகப் பயன்படுத்தப்படாது கழிவுப் பொருட்கள் போடப்பட்டு துர்நாற்றம் வீசியபடி இருந்த முப்பத்தைந்தடி ஆழமான கிணறு ஒன்றினை அங்கு பணிபுரியும் ஊழியர்களும் சென் ஜோன் அம்புலன்ஸ் படையினரும் இணைந்து பன்னிரண்டு நாட்களாக மேற்கொண்ட சிரமதானப்பணி மூலம் இன்று அவர்களுக்கு சிறந்த குடிநீர் கிடைத்துள்ளது. இதனால் அங்கு உள்ள நோயாளர்களும் வைத்தியசாலை ஊழியர்களும் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறார்கள்.

தற்போது அக்கிணற்றுக்கு கப்பி போடப்பட்டு அதன் மூலம் நீர் அள்ளப்படுகிறது. இவர்கள் அண்மைக்காலங்களில் அயல் வீடுகளில் நீர் அள்ளச் சென்றபோது அங்கு நீர் வழங்க மறுத்தார்களாம். (ச)

## பலாலி ஷெல்களால் நோயாளர் பெரும் அவதி

(தெல்லிப்பளை)

கடந்த சில நாட்களாக பலாலி, காங்கேசன்துறைப் பகுதிகளில் இருந்து கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதலினால் தெல்லிப்பளை மருத்துவ மனையில் தங்கியுள்ள நோயாளர்கள் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்குகிறார்கள்.

இவர்கள் ஷெல் அடிக்கத் தொடங்கியதும் வார்ட்டுக்களைவிட்டுவெளியேறிப் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிச் சென்று தஞ்சமடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## தொண்டர் சேவை

(கொழும்புத்துறை)

யாழ். வண்ணார் பண்ணை ஸ்ரீ வெங்கடேஸ்வர வரதராஜப்பெருமாள் ஆலயத்தில் வழமைபோல இவ்வருடமும் புரட்டாதி சனிக்கிழமை விரதத் தொண்டர் சேவை யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையினரால் நடாத்தப்பட்டது. (24)

## தீவுப் பகுதியில் உப்பு விலையேற்றம்


தீவுப்பகுதியில் உப்புக்கு திடீர் கிராக்கி ஏற்பட்டுள்ளது. முன்பு ஒரு கிலோ இரண்டு ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட உப்பு தற்போது கிலோ எட்டு ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. (15)

## புதிய சந்தை

(வேலணை)

வேலணை வங்களாவடியில் புதியசந்தை உருவாக்கப்பட்டுவருகின்றது. இச்சந்தை உருவாக்கப்பட்டதும் வேலணைப்பகுதி மக்களுக்கு அன்றன்று வேண்டிய மரக்கறி வகைகளையும் உணவுப் பொருள்கள் உட்பட மற்றும் பொருள்களையும் இச்சந்தையில் பெற்றுக் கொள்ள முடியும் எனக்கூறப்படுகின்றது.

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



வீரவேங்கை

### செல்லையா சத்தியசீலன் (ரிசான்)

(5. 9. 90 அன்று யாழ்.கோட்டையில் நேரடி மோதலில் வீரமரணம் அடைந்தார்.)

வேங்கை நீ மடிந்ததில்லை - உன்
வீரமும் குறைந்ததில்லை
ஓங்கிய போர் முனையில் நீ
ஒதுங்கியும் நின்றதில்லை
பாங்குடன் போர் புரிந்து - நீ
பகைவரை வீழ்த்தும் வேளை
தாங்கினாய் நெஞ்சில் குண்டை
தமிழ் அன்னை சிலிர்த்தே போனாள்

நெஞ்சினில் குண்டு தாங்கி
நிமிர்ந்து நீ பார்த்த வேளை
வஞ்சக எதிரி அங்கே
அஞ்சியே நிற்கக் கண்டு
பொங்கிடும் சினம் அடக்கி
பொன்னுடல் தனை எடுத்து - தமிழ்
அன்னையின் மடியில் வைத்தாய்
அவள் உடல் சிலிர்த்ததன்றோ.

15- 10- 1990 திங்கட்கிழமை நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியையில் அனைத்துப் போராளிகளையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நாவலர் வீதி,
மாதகல்.

அம்மா, அண்ணா, அண்ணி
அக்காமார், அத்தான்மார்
மருமக்கள்.

(R/726)

## சுழற்சி முறையில் ஊழியர் வேலை

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அலுவலக ஊழியர்கள் தற்போது தாமாகவே இணக்கத்துக்கு வந்து சுழற்சி முறையில் அலுவலகங்களுக்கு சென்று வேலை செய்யும் புதிய முறையொன்றைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

யாழ். நகரில் உள்ள ஒரு அரச அலுவலகத்தின் ஊழியர்கள் இருபிரிவுகளாகப் பிரிந்து ஒன்று விட்டு ஒருநாளுக்கு ஒரு பிரிவினராக சமுகம் தந்து தமது அலுவலகங்களைத் தினமும் கலகலப்பாக இருக்கச் செய்ய முயற்சிக்கின்றனர் என அந்த அலுவலகங்களுக்கு சென்று பார்த்ததிலிருந்து தெரிகிறது. (லோ)

## காசோலைகள் டிசம்பர் வரை செல்லுபடியாகும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் செயலகத்திலிருந்து ஜூன் மாதத்தில் வழங்கப்பட்ட காசோலைகள் யாவும் இவ்வருடம் முடியும் வரைக்கும் செல்லுபடியானதாகும் என யாழ். செயலக பிரதம கணக்காளர் அறிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மேற்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (லோ)

## தெல்லிப்பளையில் ஹெலித்தாக்கு

(மல்லாகம்)

தெல்லிப்பளை பகுதியில் வட்டமிட்ட ஹெலிகொப்டர் நேற்று முன்தினம் பிற்பகல் 2 மணியளவில் கனிபர் தாக்குதலை மேற்கொண்டது. இத்தாக்குதலின் போது சிலர் காயமடைந்தனர். எனினும் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை. (83)

ஹப்பி ரெக்ஸ்ற்

**மலிவு விற்பனை**

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு......

சகல விதமான புடவை வகைகளையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
நாடவேண்டிய ஸ்தாபனம்

**"ஹப்பி ரெக்ஸ்ற்"**

இல. 104, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இச்சலுகை தீபாவளிப் பண்டிகை மட்டுமே

(R. 727)

## 33ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 05-05-1939



உதிர்வு 13-09-1990

### திருமதி குமாரசாமி மீனாட்சி அவர்கள்

நயினையூரைப் பிறப்பிடமாகக் கொண்டும்
இணுவையூரை வதிவிடமாகக் கொண்டு
வள்ளுவனின் வாசுகிபோல் வாழ்ந்து
எம்மையெல்லாம் பெற்று வளர்த்து பேணிய அன்னையே
உன் ஆன்மா சாந்தியடைய
ஸ்ரீ பரராஜசேகரப் பெருமானின் பேருளைப்பிரார்த்திக்கின்றோம்

இணுவில் தெற்கு

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(R/729)



கப்ரன் ஆனந்தபாபு

## 60ஆம் நாள் நினைவஞ்சலி



சிறிராம்

யாழ். கோட்டை இராணுவத்துடனான நேரடி மோதலில்
வீரமரணமடைந்தோர



நிவாஸ்

இவர்கள் பூமித்தாயை அர்ச்சிக்க
பூக்களாய் சொரிந்தனர்......
- அதனால் ஒரு
பூகம்பமே எழுந்தது எப்படி?

❋

தாயக விடுதலை இவர்களது
தாரகமந்திரமானது
ஆதிக்க வெறிக்கெதிராக ஆக்ரோஷமாக
மோதிக் கொண்டனர்

❋

கோட்டையின் இருப்பைவிட்டு
கொடுமதியோர் ஓடித் தொலைந்தனர்

❋

இவர்கள் பூமித்தாயை அர்ச்சிக்க
பூக்களாய் சொரிந்தனர்
- அதனால் ஒரு புதுயுக விடியலின்
பூபாளம் எழுந்தது.

**- நண்பர்கள்**



குருபரன்



நெப்போலியன்



குணேஸ்

### சிந்தனைக்கு

அண்டை வீட்டுக் காரனிடம் அன்புகொள்
ஆனால் வேலியை மட்டும் விலக்கிவிடாதே.
- பெஞ்சமின் ஃபிராங்க்ளின்


ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 14-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


# அபிவிருத்தி நோக்கில் தமிழின அழிப்பு

அபிவிருத்தி நோக்கில் 'இலங்கைக்குப் புதிய வடிவம் கொடுத்தல்' வேண்டும் என சில சிங்களப் புத்திஜீவிகள் கருத்துரைத்துள்ளார்கள். இவர்களின் கருத்துக்கள் அபிவிருத்தியில் நோக்கு எனவெளிப்படையாக தெரிவிக்கப் பட்டுள்ள போதிலும், இலங்கையில் தமிழரின்தாயகத்தைத் துண்டாடுவதுடன், 'புதிய வடிவத்தில்' சகல மாகாணங்களிலும் தமிழரைச் சிறுபான்மையினராக்கும் நோக்கம் கொண்டதாகவும் உள்ளது. அதேவேளை இக் கருத்து தனிப்பட்டவர்களுடையதாக வெளியிடப்பட்டுள்ளபோதும் இது பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் வெளிப்பாடும் ஆகும்.

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள மாகாண, மாவட்ட, நிர்வாக எல்லைகள் பிரிட்டிஷாரால் வரையறுக்கப்பட்ட 'வரலாற்றுவிபத்து' எனகுறிப்பிட்டுள்ள சிங்களப் புத்திஜீவிகள், அவை வரி அறவிடுவதற்காகவும் சட்டம் ஒழுங்கையும் நிலைநாட்டும் நோக்கத்திற்காகவும் இலகு படுத்தப்பட்டு வரையப்பட்ட எல்லைக் கோடுகள் எனவும் தெரிவித்துள்ளனர்.

பிரித்தானியரும் ஏன் குடியேற்றவாதிகள் யாவரும் உலகின் குடியேற்ற நாடுகளில் மேற்கொண்ட எல்லைக் கோடுகள் எல்லாம் அந்நாடுகளில் சுதந்திரத்தின் பின் பல சர்ச்சைகளைகிளப்பியுள்ளமை உண்மைதான். காலனித்துவ ஆதிக்கவாதிகள் இருந்த எல்லைக் கோடுகள் சிலவற்றை அழித்தார்கள். பலவற்றை ஏற்படுத்தினார்கள். இவர்கள் ஏற்படுத்திய மாற்றங்கள் இன்று பல பிரச்சினைக்குக் காரணங்களாக உள்ளன. ஆனால் அதற்கு இன்று தீர்வு பௌதீக ரீதியான எல்லைக் கோடுகளை தமக்கு ஏற்றவகையில் பெரும்பான்மை ஆட்சியாளர்கள் வரைவது அல்ல.

உலகில் இன்று பௌதீக எல்லைக்கோடுகள் பெரும்பாலும் வலுவிழந்துவிட்டன. பண்பாட்டுகலாசாரம் என்பனவற்றை அடியொற்றியே இன்று எல்லைக்கோடுகள் அனேகமாக வரையறுக்கப்படுகின்றன. பௌதீக எல்லைக் கோடுகளை அடிப்படையாகப் பேணுவதானால் உலகில் இன்று பல நாடுகள் இருக்காது. புதிய நாடுகள் சில தோன்றியிருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக பௌதீக எல்லைக் கோட்டை அடிப்படையாகக் கொள்வதானால் வட அமெரிக்காவில் இன்றுள்ள வடிவத்தில் நாடுகள் அமைந்திருக்காது. அமெரிக்காவின் ஒரு மாகாணமாக அலாஸ்காவும் அமைந்திருக்கமுடியாது. கங்கைபிரமபுத்திராவடிநிலத்தில் ஒரு பங்களாதேஷ் அமைந்திருக்க வேண்டிய அவசியமும் இருந்திருக்காது. ஐரோப்பாவில் தரையினால் சூழப்பட்ட ஒரு சுவிற்சலாந்தும் அமைந்திருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது.

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு எல்லைகளை விட மக்கள் அபிவிருத்தியுடன் இணைக்கப்படுதல் அவசியம் மக்கள் இணைக்கப்படாமல் எந்தவித அபிவிருத்தித் திட்டமும், நாடும் அபிவிருத்தி அடைந்ததாக இல்லை. இந்த நிலையில் அபிவிருத்தி பற்றித் திட்டமிடுபவர்கள் அபிவிருத்தி என்ற போர்வைக்குள் வேறுபிரச்சினைகளை மறைக்கமுற்படக்கூடாது.

இலங்கையிலும் அபிவிருத்தி பற்றிப் பேசுகின்றவர்கள் இன்று இனங்களுக்கிடையில் எழுந்துள்ள தீவிரமான முரண்பாட்டைக் கருத்திற் கொள்ளுதல் வேண்டும். அதை விடுத்து சிறுபான்மை இனங்களை ஒடுக்குவதற்காக அபிவிருத்தித்திட்டங்கள் என்ற போர்வையில் திட்டங்களை முன்வைத்தால் அவை வெற்றியளிக்கப்போவதில்லை.

இன்று இலங்கையின் அபிவிருத்தி பற்றிப் பேசுபவர்கள் முதலில் இனப்பிரச்சினை தீர்வுபற்றியே பேச வேண்டும். இனப்பிரச்சினையை ஒதுக்கிவிட்டு அபிவிருத்தி பற்றிப் பேசுவது எந்தவித பிரயோசனத்தையும் தரப் போவதில்லை. அபிவிருத்திக்கு அவசியமானது அரசியல் ஸ்திரப்பாடே.

# பாக். அணுவாயுதத்திற்குத் தடை
## அமெரிக்க - சோவியத் நட்பு

பாகிஸ்தான் அணுஆயுத உற்பத்தியில் ஈடுபடுவதில்லை என்பதை உத்தரவாதப் படுத்தும் வரை பாகிஸ்தானுக்கான ஆயுத விநியோகம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதென கடந்த மாதம் அமெரிக்க அரசு அறிவித்திருந்தது.

பாகிஸ்தான் அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபட்டுள்ளதா அல்லதுஇல்லையா என்பதைக் கண்டறிய கபூட்டா அணு ஆய்வு நிலையத்தை வெளிநாட்டுக் குழு பார்வையிட பாகிஸ்தானிய அரசு அனுமதிக்க வேண்டும் எனவும், அவ்வாறு அனுமதிக்க மறுத்தால் டிசம்பர்மாதத்திலிருந்து பாகிஸ்தானுக்கு எதிரான பொருளாதாரத் தடை நடவடிக்கைகளை அமெரிக்க அரசு கடைப்பிடிக்கும் எனவும் மேலும் ஒரு கட்டுப்பாட்டை இம் மாதம் அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் அணுஆயுத தயாரிப்பில் ஈடுபட்டு வருவதாக கடந்த நான்கு ஆண்டுகளுக்கு மேலாக இந்தியா பெரிதும் குரலெழுப்பி வந்த போது அதனை அசட்டை செய்து வந்த அமெரிக்கா இப்போது ஏன் பாகிஸ்தானின் இந்த நடவடிக்கைக்குஎதிராக நேரடித் தடை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது?

பாகிஸ்தானின் அணுஆயுத தயாரிப்பை இட்டு இந்தியா. இஸ்ரேல், சோவியத் யூனியன் ஆகிய மூன்று நாடுகளும் பெரிதும் கவலை அடைந்தன. பாகிஸ்தான் இந்தியாவின் பாரம்பரிய எதிரியும், அதன் எல்லைப்புற நாடும் என்பதால் பெரிதும்கவலை அடைந்தது. இஸ்ரேல் தனது பாரம்பரிய எதிரிகளாக இஸ்லாமியரை நினைப்பதால் பாகிஸ்தானின் அணுகுண்டு இஸ்லாமிய அணுகுண்டு என்ற வகையில் இஸ்ரேல் அஞ்சுகின்றது.

சோவியத் யூனியனின் ஒரு எல்லை நாடாகிய ஆப்கானிஸ்தானைத் தாண்டினால் வரும் அடுத்த நாடு பாகிஸ்தான் என்ற வகையில் பாகிஸ்தானின் அணுகுண்டு தனது தலையணைக்கு அருகில் இருப்பதாக சோவியத் கவலை அடைகிறது. ஆதலினால் மேற்கூறிய இம் மூன்று நாடுகளும் பாகிஸ்தானின் அணுவாயுதத் தயாரிப்பை தீவிரமாக எதிர்க்கின்றன.

**சாரணன்**

அமெரிக்காவின் செல்லப் பிள்ளை ஆகிய இஸ்ரேலின் வற்புறுத்தல்களுக்கு இணங்கி பாகிஸ்தானுக்கு எதிராக அணு ஆயுத தயாரிப்புத் தடையை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் அமெரிக்காவிற்கு இருந்த போதிலும் அது தனது எதிரிக் கூட்டாளிகளாகிய சோவியத் யூனியனுக்கும், இந்தியாவிற்கும் இது ஒரு நெருக்கடியாக அமையட்டும் என்பதற்காக அமெரிக்கா இது விடயத்தில் அசிரத்தையைக் காட்டி வந்தது. மேலும் ஆப்கானிஸ்தானில் சோவியத் இராணுவம் இருந்த சூழலில் பாகிஸ்தானை பகைக்க அமெரிக்கா விரும்பவுமில்லை.

சோவியத் யூனியனில் கொர்பசேவின் பெரஸ்ரொய்கா எனப்படும் மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து இருபெரு வல்லரசுகளுக்கும் இடையிலான கெடுபிடி யுத்தம் (Cold war) முடிவடைந்து அமெரிக்க சோவியத் நட்புறவு ஏற்படத் தொடங்கியது. சர்வதேச விவகாரங்கள் பலவற்றில் அமெரிக்காவும், சோவியத் யூனியனும் ஒன்றாகக் கைகோர்க்கத் தொடங்கின.

ஈராக் விவகாரத்தில் சோவியத்தின் உளவுப்படையாகிய கே. ஜி. பீ. அமெரிக்காவிற்கு ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்துள்ள வரை அமெரிக்க-சோவியத் உறவு வளர்ச்சி அடைந்துள்ளது. இந்த நிலையில் பாகிஸ்தான் அணுவாயுத தயாரிப்பில் ஈடுபடக்கூடாது என்ற சோவியத்தின் விருப்பத்தைநிறைவேற்ற அமெரிக்கா தயக்கம் காட்டாது என்பது வெள்ளிடைமலை. அதேவேளை இது இஸ்ரேலைத் திருப்திப்படுத்தும் என்பதுடன் இந்தியாவுடனான பொருளாதார உறவுகளை விருத்தி செய்யவும் வாய்ப்பாக அமையும்.

எனவே பாகிஸ்தானின் அணுவாயுத தயாரிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக அமெரிக்கா நேரடிக் கடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமையானது அமெரிக்க- சோவியத் நட்புறவின் வெளிப்பாடேயாகும். மேலும் மூன்றாம் உலக நாடுகளின் விவகாரங்கள் பொறுத்து இவ்விரு பெரும் வல்லரசுகளும் பல விடயங்களில் ஒன்றாகக் கைகோர்த்து நிற்கும் என்பதற்கு இந்நிலைப்பாடு ஒரு கட்டியமாக அமைந்துள்ளதெனலாம்.

# தமிழீழத் தேசியக் கலைஞர்களுக்கு 'நிதர்சனம்' அழைப்பு

விடியலை அண்மிக்கும் இவ்வேளையில் அதனைத் துரிதமாக்கும் பணியில் கலைஞர்களின் பங்கு கணிசமானது. எங்கள் தாயகமாம் தமிழீழத்தின் விடுதலைப் போரினை உணர்வு ரீதியாகப் புரிந்து கொண்டு பங்களிப்பை நல்கிட அனைத்துத் தேசியக் கலைஞர்களுக்கும் 'நிதர்சனம்' அழைப்பு விடுத்துள்ளது. இந்த அழைப்பினையேற்றுத் தேசியக்கலைஞர்களை இராமநாதன் வீதியிலுள்ள 'நிதர்சனம்' பணிமனையுடன்தொடர்புகொள்ளும்படிகேட்டு 'நிதர்சனம்' வெளியிட்ட அறிக்கை வருமாறு:

இன்றுநாம் நமதுமண்ணில் நமது உரிமையையும், இறைமையையும் வென்றெடுத்து தமிழீழத் தாயகத்தை மீட்கும் இறுதிப்போரொன்றில் நம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கின்றோம். எதிரியின்திட்டமிட்ட எம்மின அழிப்புவேலைகள், பன்முகப்பட்ட முறையில் ஒரே இலட்சியத்துடன் எம்மண்ணையும் மக்களையும் நிர்மூலமாக்கும் பணியினை தொடர்ந்து கொண்டேயிருக்கிறது.

இந்த நிலையில் எமது மக்களின் தாயகப்பற்றுடன்கூடிய போராட்ட உணர்வு ஒருமுகப்படுத்தப்பட்டு கூர்மைப்படுத்தப்பட்டாலன்றி நமது மண்ணின் விடுதலையானது துரிதமாக ஏற்படுதல் இயலாததாகும்.

அதாவது திலீபன் கூறியது போன்று ''மக்கள்புரட்சி'' வெடித்தால் மட்டுமே சுதந்திரத் தமிழீழம் மலரும் காலத்தை வெகுவிரைவில் உருவாக்க முடியும்.

மக்களைப் போருக்கும் புரட்சிக்கும் தயாராக்கும் மகத்தான பணியில் கலை இலக்கிய கர்த்தாக்களின் பங்கு மிகமுக்கியமானதொன்றாகும்.

கலை இலக்கிய ஊடகங்கள் மக்களை அணுகுவதற்கு இலகுவானதும் உணர்வு ரீதியாகச் சிந்திக்கவைத்து செயற்பட வைக்கும் ஆற்றல்கொண்டுள்ள தென்பதை உலகின் பல்வேறு நாடுகளிலும் நடந்த, நடக்கின்ற விடுதலைப்போராட்ட நிகழ்விலிருந்து நாம் அறிந்துகொண்டுள்ளோம்.

சீனப்புரட்சியின் தலைவர் மாவோ, வியட்நாமியத் தந்தை ஹோசிமின், ரஷ்யா புரட்சிக் கலைஞன் மாக்ஸிம் கோர்க்கிஇருண்டகண்டத்தின் விடுதலைவிடியலுக்காக இலக்கியம் படைத்த கறுப்புக் கலைஞர்கள், பாரதநாட்டின் விடுதலைக்காக கவிதைமூலம் அறைகூவல் விடுத்து மக்கள் எழுச்சிக்கு வித்திட்ட மகாகவி பாரதி, தாகூர், பல கலைஞர்கள்...இப்படி ஏராளமானோர் தத்தம் தாயகத்து விடுதலைக்காக கலை இலக்கியப் படைப்புகள் மூலம் மக்களின் உணர்வலையைத் தட்டி எழுப்பி போராட்டத்தில் பங்கேற்கச் செய்ததன் மூலம் போராட்டத்துக்கு தம்பங்கினை செவ்வனே செய்துள்ளதைவரலாறுகள்உறுதிப்படுத்துகின்றன.

இத்தகைய பங்களிப்பை அவர்களைக் காலத்தை வென்ற கலைஞர்களாக்கி தத்தம் நாட்டின் தேசியக் கலைஞர்களாகும் உயர் கௌரவத்தையும் பெற்றுக் கொடுத்துள்ளது.

தமிழீழவிடுதலைப்போராட்டத்தைப்பொறுத்தவரை பல கலைவடிவங்கள் விடுதலைப் போருக்கு ஆதரவாக வெளிவந்துள்ளன. பலகலைஞர்கள் இவ்வாறான படைப்புக்களை உருவாக்கப் பெரிதும் உதவி புரிந்துள்ளனர்.

எனினும், இவை போதாது. தமிழீழத்தின் அனைத்துக்கலைஞர்களும் எம்முடன் இணைய வேண்டும். அவர்கள் தமது திறமைகளை முழுமையான விடுதலைக்காகப் பயன்படுத்த வேண்டும்.

தமிழீழக் கலைஞர்களே! படைப்பாளிகளே!! உங்களை இந்தத் தேசத்தின் நம் தமிழீழத் தாயகத்தின் எதிர்காலம் தேசியக் கலைஞர்களாக படைப்பாளிகளாக, கௌரவிக்கும் உயர்ந்தவாய்ப்பினைப் பெறுவதற்காக இறுதிக் கட்டத்தில் என்ன தீர்மானம் எடுக்கப்போகிறீர்கள்?

குழந்தைகளிலிருந்து முதியோர்கள் வரை வயது, பால் வேறுபாடின்றி தம் பங்களிப்பினை போட்டிபோட்டு நல்கிவரும் இந்தக் காலகட்டத்தில் நீங்கள் என்னசெய்வதாக உத்தேசம்?

இந்தத் தேசத்தின், எங்கள் தாயகமாம் தமிழீழத்தின் விடுதலைப்போரில் உங்களின் பங்களிப்பினை உணர்வு ரீதியாகப் புரிந்துகொண்டு எம்மோடு இணைந்து செயற்பட்டு ஒரு மக்கள் புரட்சிக்கான அணிதிரளலில் பிணைத்துக் கொள்ள உடனே புறப்படுங்கள்.

உங்கள் துறைகளில் உங்களோடு நாமும் எம்மோடு நீங்களுமாய்ஒன்றிணைந்து செயல்படுவதற்காக உங்களின் ஆக்க

(6ஆம் பக்கம் பார்க்க)

# கிளிநொச்சி தபாலகத்தில் 1லட்சரூபா முத்திரைகொள்ளை

கிளிநொச்சி தபால் நிலையத்தில், ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான, முத்திரைகளும், சுமார் 45 ஆயிரம் ரூபா பணமும் கிளிநொச்சி இராணுவ நடவடிக்கையின்போது கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

தபால் நிலையத்தில் இருந்த முக்கிய ஆவணங்களும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் கிளிநொச்சி தபால் நிலையத்தில் இயங்கி வந்த மக்கள் வங்கிக்கு சொந்தமான 65 ஆயிரம் ரூபா பெறுமதியான இரும்புப் பெட்டியும் இராணுவ நடவடிக்கையின் போது உடைக்கப்பட்டுள்ளது.

சேதமடைந்த அதே நிலையத்திலேயே, தற்போதும் தபால் நிலையம் இயங்கிவருகின்றது. (36)

# 1948இல் சிங்களவர் ஆட்சிஏற்றனர்; தமிழர் சுதந்திரம் பெறவில்லை

## — தேவர்

(பண்டத்தரிப்பு)

1948 ஆம் ஆண்டு வெள்ளையனிடமிருந்து சிங்களவனுக்கு ஆட்சி மாற்றப்பட்டதே அன்றி அது தமிழனுக்குக் கிடைத்த சுதந்திரமாகக் கருத முடியாது. இச்சுதந்திரத்திற்காகவே நாம் இன்று வரை எத்தனையோ உயிர்த் தியாகங்களைச் செய்துகொண்டிருக்கின்றோம் என விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரான தேவர் குறிப்பிட்டார்.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில், எமக்குப் பூரண சுதந்திரம் எமது தமிழீழத்தில் தான் என்பதை யாரும் மறுக்க முடியாது. இன்று பெரும்பாலான தமிழ் மக்கள் சுயநலவாதிகளாக இருக்கிறார்கள். சந்தர்ப்பம் கிடைத்ததும் புற்றீசல் போல் சிறிலங்காவிற்குத் தப்பியோட முயற்சிக்கிறார்கள். நாம் மக்கள் இல்லாத வெறும் மண்ணுக்காகப் போராடவில்லை என்பதை நீங்கள் நன்கு உணரவேண்டும். விடுதலை உணர்வு ஒவ்வொரு தமிழனின் மத்தியிலும் ஏற்படவேண்டும்.

1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தின்போது எமது மக்கள் சிறிலங்காவில் இருந்து அகதிகளாக உடைமைகளை இழந்து, சொத்துக்களை இழந்து, உடன் பிறப்புக்களை இழந்து இங்கு வந்தார்கள். ஆனால் அப்படிஒரு சந்தர்ப்பம் வரும் பட்சத்தில் அவர்களை தமிழீழத்தில் ஏற்க நாம் தயாராக இல்லை. அவர்கள் தமிழீழத்தின் துரோகிகளாகவே கருதப்படுவார்கள் என்றார்.

இக் கூட்டத்தில் செங்கதிர், குகதாசன், சிற்றூரவை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்கள்.

இதனைத் தொடர்ந்து திலீபனின் உண்ணாவிரத நிகழ்ச்சி, கோட்டையில் புலிக்கொடி ஏற்றும் வைபவம் ஆகியன பற்றிய தொலைக்காட்சி நிகழ்ச்சியும் காண்பிக்கப்பட்டது. அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவினரின் ''போர்க் காலத்தில் ஓர் புனிதத்தாய்'' என்ற இசை நாடகமும் காண்பிக்கப்பட்டது. இக் கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

## சிறுத்தீவில் ஒருவர் காலை இழந்தார்

(விசேடநிருபர்)

கடலட்டை பிடிக்க சிறுத்தீவுக்குச்சென்றவரின் இடது கால்மிதிவெடியில்சிதைந்தது.

இச்சம்பவம் நேற்றுமாலை (13.10.90) 4.30 மணியளவில் நடைபெற்றது.

குருநகரைச்சேர்ந்த செபமாலை நிச்சாட் புஸ்பராசா (வயது 39) என்பவரே மிதிவெடியில் சிக்கியவராவர்.

யாழ்.கடற்கரை வீதி திருச்சிலுவை சுகநல நிலையத்தில் முதலுதவிச்சி ச்சை வழங்கப்பட்டு மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (21)

## தீவுப்பகுதி அகதிகளுக்கு பொருள்கள் விநியோகம்

(வேலணை)

புங்குடுதீவு, நயினாதீவு பலநோக்குக்கூட்டுறவுச்சங்கங்கள் தமது அதிகாரத்துக் குட்பட்ட பகுதிகளில் தங்கியுள்ளவர்களுக்கும் மற்ற இடங்களில் இருந்து அகதிகளாக இடம் பெயர்ந்து அங்குதங்கியுள்ள அகதிகளுக்குமான நிவாரணப் பொருள்களை வழங்கி வருகின்றன.

யாழ் மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் 3ஆவது நிவாரணப் பொருள்களை வழங்கிய பெருமை புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தைச் சார்ந்ததாகும்.

## மருந்து விநியோகத்தில் அசட்டை

(யாழ்ப்பாணம்)

அரியாலை கிழக்குப் பகுதி நாவலடியில் 'அன்பகம்' மருத்துவ நிலையத்தில் கடமையில் இருப்போர் அசிரத்தையாகச் செயலாற்றுவதாகத் தெரியவருகிறது. டாக்டர்கள் கொடுக்கும் மருந்துச் சீட்டுக்குரிய மருந்துகள் கைவசம் இருந்தாலும் அவை பொது மக்களுக்கு உரிய முறையில் விநியோகிக்கப்படுவதில்லையெனப் பேசப்படுகின்றது.

## கிராமசேவகரின் சைக்கிள் திருட்டு

(வேலணை)

அகதிகள் தொழில் இழந்தவர்களுக்கான நிவாரணப் பொருள்களை கொடுப்பதற்கான விபரங்களை சேகரிக்கச் சென்ற இராமசேவையாளரின் துவிச்சக்கரவண்டி ஒன்றை திருடர் கோஷ்டி திருடிச் சென்றுவிட்ட சம்பவமொன்று சரவணை மேற்குப் பகுதியில் இடம் பெற்றிருக்கின்றது.

இவ்வாறு தனது துவிச்சக்கர வண்டியை பறிகொடுத்தவர் திரு. செ. சச்சிதானந்தன் என்பவராவார்.

(24)

### தமிழீழத்....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பூர்வமான குரலை நாம் எதிர் பார்க்கின்றோம்

உலகில் விடுதலைக்காகப் போரிடும் மக்களது வரலாறுகள் நிச்சயம் உங்களைச் சிந்திக்கவைத்து செயற்படஇயக்கும். மற்றவர்களைச் சிந்திக்கவும் செயற்படவும் வைக்கும் ஆற்றல் கொண்ட உங்களுக்கு நாம் புதிதாக எதனையும் சொல்லவேண்டிய அவசியம் இல்லை.

விடியலை அண்மிக்கும் இவ் வேளையில் அதனைத் துரிதப்படுத்தும் பணியில் உங்களின் பங்கு கணிசமானது என்பதை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம்.

இந்தவாய்ப்பினைப் பயன்படுத்தவிரும்பும்கலைஞர்கள், படைப்பாளிகள் அனைவரும் எம்மூடன் தொடர்பு கொள்ளவும்:

''நிதர்சனம்''
234, இராமநாதன் வீதி
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

## நிவாரணம் விநியோகம்

பண்டத்தரிப்பு கூட்டுறவுக் கடைகளில் இடம்பெயர்ந்தோருக்கான மூன்றாம்கட்ட நிவாரணப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.

இவர்களின் கிராமசேவையாளரால் வழங்கப்பட்ட பெர்மிற்றையும் பங்கீட்டு அட்டையையும் சமர்ப்பித்து மேற்படி நிவாரணத்தைபெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆயிரத்திஐநூறு ரூபாவிற்கு மேல் வருமானம் பெறுபவர்களுக்கும் உணவுப்பொருட்கள் வழங்கப்படுகின்றன. இவர்கள் தமது குடும்ப பங்கீட்டு அட்டையையும் உரிய பணத்தையும் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## கலைஞர்களுக்கு கருத்தரங்கு

(அரியாலை)

அரியாலைப் பிரதேசத்தில் வாழும் கலைஞர்கள் அனைவருக்குமான கருத்தரங்கு ஒன்று இன்றுபிற்பகல் 4 மணியளவில் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் இடம் பெறுகின்றது. ''நிதர்சனம்'' பிரதம பொறுப்பாளர் திரு. பரதன் அவர்கள் உட்படபலர் கலந்து கொள்ளும் இக்கருத்தரங்கில் இப்பிரதேசகலைஞர்கள் அனைவரும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## பெற்றுக் கொள்ளலாம்

புங்குடுதீவைச் சேர்ந்த மகாலெட்சுமி கணேசன் என்பவருடைய தேசியஅடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் வந்து உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

க. பொ. த. உயர்தர
மாணவர்களுக்கான

அறிவித்தல்

நாளைய ஈழநாதத்தில்

## இந்திய கடற்படையின் புதிய தளபதி எல். ராம்தாஸ்

வைஸ் அட்மிரல் எல். ராம்தாஸ் இந்தியக்கடற்படையின் புதிய தளபதியாக நியமனம் பெற்றுள்ளார். தற்போதைய கடற்படைத் தளபதியான ஜே. ஈ. நட்கர்னி அடுத்த மாதத் தொடக்கத்தில் ஓய்வு பெறுகின்றார். அவரது இடத்திற்கு வைஸ் அட்மிரல் எல். ராம்தாஸ் நியமிக்கப்பட்டுள்ளதாக புதுடில்லியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வைஸ் அட்மிரல் ராம்தாஸ் 1971பங்களாதேஷ்யுத்தத்தின் போது வீரசக்கர விருதுபெற்றவர் என்பதுடன் பல வேறு வீரப்பதக்கங்களையும் பெற்றுள்ளார். தற்போது இந்தியக் கடற்படையின் கிழக்குப் பிராந்திய தளபதியாக பணியாற்றும் இவர் இம்மாத முடிவில் பதவியுயர்வு பெற்று தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

## நயினாதீவுக்கு 2 நாட்களுக்கு ஒரு படகுச் சேவை மட்டுமே

குறிகாட்டுவான் - நயினாதீவு படகுச்சேவை தற்போது ஒன்று விட்டு ஒரு நாள் மட்டுமே நடாத்தப்படுகின்றது. நயினாதீவில் உள்ள சிறிலங்கா கடற்படையினரால் அனுமதி அளிக்கப்பட்ட இரண்டு படகுகள் மட்டுமே இச் சேவையில் ஈடுபடுகின்றன மேற்படி சேவை நடைபெறும் நாட்களில் காலை எட்டு மணியளவில் நயினாதீவில் இருந்து குறிகாட்டுவான் துறைக்கு வரும் படகு பிற்பகல் மூன்று மணியளவில் நயினாதீவு்க்கு செல்கின்றது.

இப் படகுச் சேவை நயினாதீவில் உள்ள கோயிலடி, வங்களாவடி ஆகிய துறைகளில் ஒரு துறைக்கு மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றது. இதேவேளை நெடுந்தீவிற்கான படகுச் சேவை தொடர்ந்தும் ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. அத்தியாவசிய சேவைகளை மேற்கொள்வதற்கு மட்டும் சில வேளைகளில் அனுமதி அளிக்கப்படுகிறது. (22)

### பலாலியில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 30), இவரது ஐந்து வயது பெண் குழந்தை மேனகா ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் அவசர சிகிச்சைக்காக மானிப்பாய் போதனா மருத்துவமனைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். இச்சம்பவத்தில் வேறு இருவரும் சிறுகாயமடைந்தனர்.

மேற்படி சனசமூக நிலையத்தின் ஒரு பகுதியும் சேதமடைந்தது. ஏனைய பகுதிகளில் பரவலாக விழுந்து வெடித்த ஷெல்களினால் பெரும் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

கடந்த சில நாட்களாக பலாலி முகாமில் இருந்து மேற்கொள்ளப்படும் ஷெல் தாக்குதல் காரணமாக முகாமின் அண்மையில் உள்ள கிராம மக்கள் பெருமளவில் இடம்பெயர்ந்து வருகின்றனர். (க)

### வைத்தியசாலை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மல் போயின. இதனால் கொழும்பிலிருந்து புதிதாக மருத்துவ உபகரணங்கள் கொண்டுவரப்படவுள்ளன.

வவுனியா வைத்தியசாலை செயற்படுகின்ற இவ்வேளையிலும் திடீர் திடீரென்று வைத்தியசாலையில் உள்ள சில பொருட்கள் மாயமாகமறைந்துவிடுகின்றன

சில தினங்களுக்குமுன் வைத்தியசாலை முதலாம் நோயாளர் விடுதியில் இயங்கிக் கொண்டிருந்த மின்விசிறி மாயமாய் மறைந்து போய் விட்டது. (தி)

### பாலஸ்தீனியர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜெருசலேமுக்குநேரடிவிஜயம் செய்யஉள்ளனர். இஸ்ரேலின் மேற் குறிப்பிட்ட அடாவடித்தனம் சம்பந்தமாக ஐக்கிய நாடுகள் சபை ஏகமனதான தீர்மானம் நிறைவேற்றியிருந்ததும், இஸ்ரேல் தீர்மானத்தினைக் கண்டித்திருந்ததும் தெரிந்ததே.

### ஆசிரியர்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காலை 10மணிக்கு நல்லூர் சி. சி, தமிழ் வித்தியாலயத்தில் சந்திக்குமாறு ஆசிரியர் சங்க செயலாளர் மகாசிவம் கேட்டுள்ளனர். (க)

### பாடசாலை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கணிசமான அளவு இருப்பதாக கல்விப்பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன. அத்தோடு இராணுவ நடவடிக்கைகளால் பாதிப்படைந்து மூடப்பட்டுள்ள கிளிநொச்சி கனிஷ்ட மகா வித்தியாலயம் கிளிநொச்சி நகர் சிற்றூரவை, பாடசாலை அபிவிருத்திசபை முதலானவை எடுத்த நடவடிக்கையின் பயனாக பிறிதொரு இடத்தில் தனியார் கட்டடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (49)

### அரச திணைக்களம்

தனிநபர் ஒருவருக்கு 55 ரூபா, இருவருக்கு 85 ரூபா, மூவருக்கு 105 ரூபா, நால்வருக்கு 125 ரூபா, ஐவருக்கு 155 ரூபா, அறுவருக்கு 170 ரூபா, எழுவருக்கு 185 ரூபா, எண்மருக்கும் அதற்கு மேற்பட்டோருக்கும் 200 ரூபா என்ற அடிப்படையில் வாரம் ஒரு முறை அண்மையில் உள்ள கூட்டுறவுக்கடை ஒன்றில் இலவச உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற ஆனி மாதம் 11ஆம் திகதிக்குப் பின்னர் வன்செயல்கள் காரணமாக மரணமடைந்த ஒருவரின் மரணச் செலவிற்காக ரூபா2000 வழங்கப்பட வேண்டுமென்றும் அந்தச் சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது விபரம் பற்றி யாழ். அரச அதிபர் கருத்துத் தெரிவிக்கையில் ''இச் சுற்று நிருபம் சம்பந்தமாக தான் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடியதன் பிரகாரம் மிக விரைவில் நிவாரணப் பொருளகளை வழங்கவும் அதற்குரிய திகதியை அறிவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.'' (24)

### தமிழீழப்

இவ்வாறு நேற்று ஏழாலை மேற்கு சன்மார்க்க வித்தியாசாலையில் இடம்பெற்ற மறைந்த மக்கள் கலைஞர் திரு. வி. எம். குகராஜாவின் மூன்றாவது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் அரசியற் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இதுவரை இரண்டாயிரத்து மூன்று விடுதலைப்புலிகள் வீரமரணமடைந்துள்ளனர். இவர்களின் உயிர்த்தியாகத்தால் வீர சாதனைகள் படைக்கப்பட்டன. இலங்கை அரசினால் தமிழீழத்தில் மாபெரும் இராணுவத்தாக்குதல் திட்டமிடப்பட்டது. ஆனால் அதற்கு இராணுவத்தினர் உடன்பட மறுத்துவிட்டார்கள். விடுதலைப் புலிகளின் வீரஞ்செறிந்த போராட்டத்திற்கு ஈடுகொடுக்க முடியாது என இராணுவத்தினர் தற்போது உணரத் தொடங்கியுள்ளனர் என்றார்.

நேற்று அமரர் குகராஜாவின் உருவப்படம் சுன்னாகம் ப. நோ. கூ. சங்கத்திற்குமுன்பாக அவரது தந்தை திரு. வி. மார்க்கண்டுவினால் திரைநீக்கம் செய்யப்பட்டது. பின்னர் ஏழாலையில் நினைவஞ்சலி நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

இதில் விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தர்களான தேவர், ராஜன் ஆகியோர் உட்பட சிற்றூரவை, வட்ட அவை உறுப்பினர்கள் பலரும் உரையாற்றினார்கள். இறுதியில் இசை, நாடக நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

### நாளை

இம்மாதம் முதலாம்திகதி முதல் மேற்படி இடத்தில் உள்ளக வேலைகள் யாவும் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (24)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.